# தமிழியல் ஆவணம்

முனைவர் கு. பகவதி, முனைவர் செ. ஜீன் லாறன்ஸ்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 600 113, இந்தியா

---

ஒரு துறை வளர்ச்சி என்பது அத்துறை சார்ந்த கல்வி, துறை சார்ந்த ஆய்வு என்பனவற்றைப் பொறுத்தது. ஆய்வு இரண்டும் காலத்திற்கு ஏற்ப திட்பமும் நுட்பமும் பொருந்தப் பயிற்றுவிக்கப்படல் வேண்டும்; நோக்கப்படல் வேண்டும். மேலும் உலகின் எந்த மூலையில் வெளிப்படும் புதிய கண்டுபிடிப்புகள், சிந்தனைகள் ஆயினும் அவை கருவிகளாக இருக்கலாம் அல்லது கோட்பாடுகளாக இருக்கலாம். அவற்றைத் தொடர்புடைய எல்லாத் துறைகளும் உள்வாங்கிக் கொண்டு தம் வளர்ச்சிக்கு ஏற்றவாறு பயன்படுத்தும்போதுதான் அத்துறை தன்னை உயர்த்திக்கொள்ள இயலும், வளர்ச்சி பெற்றதாக ஆக்கிக் கொள்ள முடியும்.

இது கணினி யுகம். இன்று கணினியைப் பயன்படுத்தாத துறையேயில்லை; கணினியைப் பயன்கொள்ளாத மனிதரே இல்லை என்னும் அளவிற்குக் கணினி மனித வாழ்வில் ஒன்றற கலந்துவிட்ட நிலை கண்கூடு. கணினியைப் பயன்படுத்தத் தெரியாத மனிதன் இன்று எழுதப்படிக்கத் தெரியார மனிதனுக்குச் சமம் என்பர். சாதாராண மனிதனுக்கே கணினியின் பயன்பாடு அடிப்படையாகிவிட்ட நிலையில் அறிவுசார்ந்த துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு எனில் அடுத்த சிந்தனைக்கே இடமில்லை. இதற்குத் தமிழியலும் விலக்கல்ல. தமிழறிஞர்களும் விலக்கல்ல.

இன்று கணினி வழியே தமிழ்மொழியைக் கற்பித்தல் நடைபெறுகிறது. தமிழ்மொழியில் உள்ள இலக்கண இலக்கியங்கள், தமிழர் கலைகள் போன்றவற்றைக் கணினி வழி வெளிக்கொணரும் பணி நடைபெறுகிறது. இதனால் தமிழ், தமிழர், தமிழகத்தின் பெருமையை உலகினர் அறிந்து கொள்ள இயலும். தமிழின் சிறப்பை, தமிழர் சிறப்பை, தமிழகத்தின் சிறப்பைக் கணினி மூலம் எவ்வாறெல்லாம் வெளிக் கொணரலாம் என்ற தமிழர் சிந்தனைக்குக் கிடைத்த வெற்றிகளாக நாம் இவற்றைக் கருதலாம். மேலும் இயல், இசை, நாடகத்தமிழ், அறிவியல் தமிழ் இன்று தமிழை வகைப்படுத்திச் சிறப்பிப்பது போன்று இன்று கணினி தொடர்பான பல சொற்களின் பெருக்கம் மற்றும் கணினியில் தமிழின் பயன்பாட்டைத் தன்மை "கணினித் தமிழ்" என்ற சொல்லாட்சியை உருவாக்கியிருப்பதையும் காண்கிறோம்.

இத்தகைய நிலையில் கணினி மூலம் தமிழை, தமிழர் சிந்தனைகளை உலகெங்கும் பரவும் வகை செய்தல் வேண்டும்; அது உலகினரின் கல்வி / ஆய்வுப் பணிக்கு உதவும் என்ற சிந்தனையின் இன்னொரு வெளிப்பாடே கணினியில் தமிழியலை ஆவணப்படுத்தும் திட்டம்.

ஒரு குறிப்பிட்ட பொருள் தொடர்பான செய்திகளைப் பதிவு செய்து வைத்தல் ஆவணப்படுத்துதல் எனப்படும். இவை அக்குறிப்பிட்ட பொருள் தொடர்பான செய்திகளைத் தெரிந்து கொள்வதற்கு, மேல் ஆய்வு/மீளாய்வு செய்வதற்கு உதவுவன. எனவே ஆய்வுக்கு முக்கியமான இத்தகைய ஆவணங்களைப் பாதுகாத்தல் இன்றியமையாதது. இத்தகைய ஆவணப்படுத்துதல் தமிழியலுக்குப் புதியதன்று.

இதுவரையிலும் தமிழியல் ஆணவப்படுத்துதல் என்ற பகுதியை நோக்க, படைப்பாசிரியர்/நூலாசிரியரின் படைப்புகளை/ ஆய்வுகளைத் தொகுத்து வகைப்படுத்திச் செய்திகளைப் பதிவு செய்துள்ளமையுடன், இலக்கணம் தொடர்பான செய்திகள், நோக்கு

நூல்கள், இலக்கியம் தொடர்பானவை என பலவாறாகப் பதிவுகள் அமைந்துள்ளன. இவற்றினின்று தமிழியல் ஆவணம் இரு நிலையில் வேறுபடுகின்றது. 1. தமிழியலில் ஒர் பகுதி அல்லது ஒரு பொருள் என்றில்லாது தமிழியல் அனைத்தையும் ஆணவப்படுத்தும் முயற்சி இது. 2. பிற அனைத்தும் நூல்கள், கட்டுரைகள் என வெளிவந்துள்ளன. சிலரே அவற்றைப் பயன்படுத்த இயலும். ஆனால் தமிழியல் ஆவணம் இணையம் வழிச் செயல்படும் தன்மையில் உலகளாவிய நிலையில் பயன்தரும்.

தமிழரின் வாழ்வியல், சமயம், தத்துவம், வரலாறு, கலை, வாணியல், மருத்துவம், தொழில் நுட்பம், பொருளாதாரம், குடியேற்றம்/குடிபெயர்ச்சிச் செய்திகள் போன்ற பல அறிவு சார்ந்த துறைகளை அறிந்து கொள்ள உதவும் வரலாற்று மூலங்களாக அவர்தம் இலக்கியங்கள், இலக்கணங்கள், கல்வெட்டுகள், பிறநாட்டார்க் குறிப்புகள், தொல்பொருள் சான்றுகள், வாய்மொழி இலக்கியங்கள், குடியேற்றம்/ குடிபெயர்ப்புச் செய்திகள் போன்ற பலவும் அமைகின்றன.

இவற்றை அரணாகக் கொண்டு, ஆராய்ந்து கண்டறிந்த உண்மைகளைத் தமிழர் தம் எழுத்துகளில் புலப்படுத்தி உள்ளனர்; புலப்படுத்தி வருகின்றனர். ஒவ்வொரு துறையிலும் தமிழரின் புலமைகள் வியக்கத்தக்க அளவிற்குச் சீரியதாக இருந்துள்ளமையினை இவற்றின் வாயிலாக அறிய முடிகின்றது. மேலும் தமிழியல் ஆய்வு இன்று கலை மற்றும் அறிவியல் சார்ந்த அனைத்துத் துறைகளிலும் பல்துறை ஆய்வு மூலமாகவும் தன் தடம் பதித்து வருகின்றது.

எனினும், தமிழரின் தொழில்நுட்ப அறிவு, பொருளாதார அரசியல் எண்ணங்கள், நீரியல், நிலவியல் அறிவு, மருத்துவ அறிவு, குடியேறிய/குடிப்பெயர்ந்த தமிழரின் வாழ்வு, அவர்தம் இலக்கியம் போன்ற சிந்தனைகள் போன்ற பலவும் இன்னமும் ஆழமாக முழுமையாக ஆராயப்படவும் இல்லை, வெளிப்படுத்தப்படவும் இல்லை. சான்றாகத் தமிழக வரலாற்றில், தமிழரின் இலக்கிய வரலாற்றில் உலகத் தமிழர் அனைவர் பற்றியும் முழுமையான செய்திகள் இல்லை (தற்போது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உலகத் தமிழ் இலக்கிய வரலாறு எழுதும் பணியில் ஈடுபட்டுள்ளது). தமிழரின் சித்த மருத்துவ நூல்கள் பல அரிய மருத்துவச் செய்திகளைக் கொண்டுள்ளன. இதன் அடிப்படையில் பல ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. நடைபெற்றுவருகின்றன. ஆயின் இச்சிந்தனைகள் அனைத்தும் ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளேயே அடங்கிக் கிடக்கின்றன. இதன் விளைவாகத்தான் நம் மருத்துசூ மூலமான வேப்பிலையினை இன்று பிறநாட்டார் உரிமை கொண்டாடுகின்றனர். பல ஆய்வு மூலங்களை இழந்துவிட்ட நாம் இன்று ஆய்வு சிந்தனைகளை இழக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளோம். இத்தகைய சூழ்நிலையில் இவை போன்ற தமிழரின் அரிய சிந்தனைகளை முறையாக உலகிற்கு வெளிப்படுத்த வேண்டியது தமிழர்தம் கடமையாகும் என்பதில் ஐயமில்லை.

தமிழரின் சிந்தனைகளை, ஆய்வுச் சிந்தனைகளை முழுமையாக வெளி உலகிற்குக் கொண்டு செல்ல இயலாததற்குரிய காரணம் என்ன என்று சிந்திக்கும்போது, தமிழியல் தொடர்பான ஒருங்கிணைப்பும், தகவல் தொடர்பின்மையுமே முதற்காரணம் என்பது புலனாகின்றது. "தமிழியல் ஆவணம" என்ன திட்டப்பணி தமிழியல் தொடர்பான செய்திகளை இணைப்பதோடு தமிழர்களை இணைக்கும் பணியாகவும் அமையும்.

## செயல்முறை

அ. இருபது நூற்றாண்டுகளாக வளர்ந்து வந்துள்ள தமிழியல் தொடர்பான மொழியியல், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், சமயம், தத்துவம் போன்ற அனைத்துச்

சிந்தனைகளையும், சார்ந்த நூல்கள், கட்டுரைகள், ஆய்வேடுகள், திட்டப்பணிகள் போன்ற அனைத்தையும் (1). தமிழகத்தின் பல்கலைக் கழகங்கள், ஆய்வு நிறுவனங்கள், நூலகங்கள் போன்ற அனைத்து இடங்களுக்கும் சென்று; (2). வெளிநாட்டுத் தமிழர்களுடன் தொடர்புகொண்டு; (3) வெளிமாநிலங்களில், வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள், நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு திரட்டுதல்;

ஆ. திரட்டப்பட்ட தரவுகள் ஒவ்வொன்றையும்

1. ஆசிரியர் பெயர்
2. நூல் / கட்டுரை பெயர்
3. பதிப்பாளர் / வெளியீட்டாளர்
4. பக்கங்கள்
5. விலை
6. ஆண்டு
7. ஆசிரியர் முகவரி
8. நூல் கிடைக்குமிடம்
9. நூல் /கட்டுரை பற்றிய சிறு வரைவு

இ. ஒவ்வொரு பதிவுக்கும் எண்கள் இடுதல்;

ஈ. எண்கள் இடப்பட்ட ஒவ்வொரு பதிவினையும் (தனிப்பட்ட கணினி மென்பொருள் மூலம் ) கணினியில் செலுத்தி விரும்பியவர்கள், அவர்கள் விரும்பும் செய்திகளை ஆசிரியர்/பொருள் அகவரிசையில் பெற வகை செய்தல;

உ. இணையம் மூலம் உலகினர் அனைவருக்கும் கிடைக்கச் செய்தல்

திரட்டிய தரவுகளைப் பதிவு செய்து துறை எண்கள் இட்டுக் கணினியினுள் செலுத்தும் வரையில் மனித உழைப்பும் பின்னர் விரும்பும் செய்திகளை ஆசிரியர்/பொருள் அகவரிசையில் தரும் நிலையில் -மென்பொருள் உழைப்பும் இணைந்து இப்பணி செயலாக்கம் பெறும்.

பயன்

1, தமிழர் 20 நூற்றாண்டு காலாகச் சிந்தித்து வந்துள்ள அனைத்துச் செய்திகளையும் ஒரே இடத்தில் பெறலாம்.

2. ஒரு பொருள் தொடர்பான அனைத்துச் செய்திகளும் ஒரே இடத்தில் கிடைக்கும் நிலையில் காலம், உழைப்பு விரயமாதல் தவிர்க்கப்படும்.

3. ஆய்வு தொய்வின்றி விரைந்த நிலையில் செயல்பட இயலும்.

4. செய்துள்ள தமிழியல் பணிகளைத் தெரிந்து கொள்வதின் மூலம் இரட்டிப்பணி தவிர்க்கப்படும். எதிர்கால ஆய்வுத் திட்டங்களை உருவாக்கலாம், வரையறைப்படுத்தலாம்.

5. ஒவ்வொரு பதிவிலும் அந்நூலில்/கட்டுரையில் உள்ள செய்திகளைச் சிறுகுறிப்பாகத் தருவதன் மூலம் அறிவியல், தத்துவம் போன்ற பல துறைகளில் தமிழர் முன்னோடியாகத் திகழ்ந்த தன்மை, ஒவ்வொரு துறையிலும் மேம்பட்ட சிந்தனைகள் அவர்களுக்கு இருந்தமை, இவற்றின் பழமை, முதன்மை போன்றவற்றை உலகினர் அனைவரும் இணையம் மூலம் அறிய இயலும்.

இத்திட்டத்தின் ஒரு முன்னோடிப் பணியாக மரபிலக்கணம் மற்றும் மொழியியல் தொடர்பான செய்திகள் சேகரிக்கும் பணி தற்போது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்று வருகிறது. போதிய நிதி கிடைக்கும் நிாலயில் தமிழ், தமிழர் தொடர்பான அனைத்து சிந்தனைகளையும் உலகினர்க்கு வெளிப்படுத்தும் இத்திட்டப்பணி முழுமையாக நிறைவு செய்யப்பெறும்.